செ.வெ.எண்:48 நாள்:23.04.2020

**கரூர் மாவட்டம்**

**அரவக்ககுறிச்சி மற்றும் பள்ளப்பட்டி பகுதிகளில் பொதுமக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் தன்மையுள்ள 16 வகை மூலிகைகள் அடங்கிய கபசூரண பொடியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப.,அவர்கள் வழங்கினார்**

அதன் விவரம் வருமாறு:

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி பள்ளிவாசல் திடல் மற்றும் பள்ளப்பட்டி ஷா நகர் பகுதிகளில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் தன்மைகொண்ட கபசூரண பொடியை பொது மக்களுக்கு இன்று (23.04.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் வழங்கினார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா தொற்று பரவலை தடுக்கும் வகையில் தெரிவித்துள்ள **“விழித்திரு, விலகியிரு, வீட்டில்இரு”** என்ற வாசகங்களை தாரக மந்திரமாக கொண்டு பொதுமக்கள் சமூக விலகலை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்** என்ற வள்ளுவப்பெருந்தகையின் குறளின் படி இன்றைய சூழலில் அரசின் உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டு வீட்டிற்குள் இருப்பவர்களுக்கு அமரருள் உய்க்கும். இல்லை என்றால் கொரோனா என்ற கொடிய நோய்த்தொற்றுக்கு ஆளாகி ஆரிருள் உய்க்க நேரிடும்.

கொரோனா தொற்றிற்கு இன்றுவரை அதிகாரப்பூர்வமாக மருந்துகள் கண்டுபிடிக்காத சூழலில், நம்முடைய உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக்கொள்வது இன்றியமையாததாகும்.

நம் முன்னோர்கள் பயன்படுத்தி வந்த மருத்துவ முறையான தமிழில் எழுதிய சித்த மருத்துவம், சமஸ்கிருத மொழியில் எழுதிய ஆயுர்வேதம், உருது மொழியில் எழுதிய யுனானி மருத்தும் மிகவும் மகத்துவம் வாய்ந்தது.

அந்த வகையில் தமிழ்முறை மருத்துவமான சித்தமருத்துவத்தின் மூலம் 16 வகையான மூலிகைகள் அடங்கிய தொகுப்பாக கபசூரணப்பொடிகள் மாவட்ட சுகாதாரத்துறையின் சித்த மருத்துவப்பிரிவின் மூலம் பொதுமக்களுக்கு கரூர் மாவட்டத்திற்கு தமிழக அரசிடமிருந்து முன்கூட்டியே 300 கிலோ பெறப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

மருத்துவ பணியாளர்கள், தூய்மைப்பணியாளர்கள், காவல்த்துறையினர் மற்றும் வருவாய்த்துறை உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் உங்களுக்காக உயிரை துச்சம்மென நினைத்து முன்னின்று பணியாற்றி வருகிறார்கள். இந்த சேவை எதற்காக என்றால் உங்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான். அரசின் கட்டுப்பாடுகள் உங்களுக்கு சிரமத்தை கொடுக்கும் கட்டுப்பாடுகள் இல்லை அது உங்களை காப்பற்கான கட்டுப்பாடுகள். எனவே, உங்களை இந்த கொடிய நோயில் இருந்து காப்பதற்கு மாவட்ட நிர்வாகத்திற்கு ஒரு வாய்ப்பு தாருங்கள். அரசின் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுங்கள். இந்த கபசுர குடிநீரை குடிப்பதன் மூலம் உடலில் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கப்படுகின்றது. எனவே, அனைவரும் தவறாமல் அருந்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி வ.சந்தியா, உதவி ஆணையர்(கலால்) திருமதி.மீனாட்சி, மாவட்ட சித்தமருத்துவ அலுவலர் மரு.காமராஜ், சித்தமருத்துவர் மரு.சுரேஸ், வட்டாட்சியர் திரு.செந்தில் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்டபு அலுவலர், கரூர்.